இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 263 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – சித்திரை 21 – ஞாயிற்றுக்கிழமை 04 மே 2025 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 263 : Thiruvalluvar Year - 2056 - Chithirai 21 - Sunday 04 May 2025 - Trichy ★★ 12 Pages ₹ 5.00

## தொழில் வளர்ச்சிக்கு இலக்கு வைத்துச் செயல்படுவது போல, தொழிலாளர் வளர்ச்சிக்கும் இலக்கு வைத்துச் செயல்படும் அரசு இது!

# என்றைக்கும் தொழிலாளர்கள் பக்கம் நிற்கும் அரசு - இந்த ‘திராவிட மாடல்’ அரசு!

## ‘மே’ தின நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 1.5.2025 அன்று உழைப்பாளர் தினமான மே நாளையொட்டி சென்னை, சிந்தாதிரிப்பேட்டை மே தினப் பூங்காவில் அமைந்துள்ள நினைவுச் சின்னத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார். இந்நிகழ்வின்போது, மக்களவை கழகக் குழுத் தலைவர், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ. வேலு, மா. சுப்பிரமணியன், எஸ்.எஸ். சிவசங்கர், பி.கே. சேகர்பாபு, எஸ்.எம்.நாசர், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையின் பொதுச் செயலாளர் மு.சண்முகம் எம்.பி., தலைவர் நடராசன், தொழிலாளர் அணிச் செயலாளர் பி.டி.சி.ஜி. செல்வராஜ் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

**சென்னை, மே 4 -**

**சென்னை - மே தின நினைவுச் சின்னத்தில், மே தினத்தன்று மலர் வளையம் வைத்து வணங்கிய பின்னர், அங்கு பெருமளவில் திரண்டிருந்த தொழிலாளத் தோழர்களிடையே உரையாற்றிய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “தொழில் வளர்ச்சிக்கு இலக்கு வைத்துச் செயல்படுவது போல, தொழிலாளர் வளர்ச்சிக்கும் இலக்கு வைத்துச் செயல்படுவது இந்த திராவிட மாடல் அரசு” என்றும், “என்றைக்கும் தொழிலாளர்கள் பக்கம் நிற்கக்கூடிய அரசு இது” என்றும் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 1.5.2025 அன்று சென்னை, சிந்தாதிரிப்பேட்டை, மே தினப் பூங்காவில் நடைபெற்ற மே தின விழாவில் ஆற்றிய உரை வருமாறு:-

“உருண்டோடுகின்ற ரயிலை ஓட்டக்கூடியவர் ஒரு தொழிலாளிதான்! இழையை நூற்று நல்லாடை நெய்பவன் யார் என்று கேட்டால் அவரும் தொழிலாளிதான்! இரும்பு காய்ச்சி உருக்குபவன் யார் என்று கேட்டால் அவரும் தொழிலாளிதான்! மிராசுதாரர்கள் மேனாமினுக்கி வாழ்க்கைக்கான பொருள்களை உருவாக்கித் தரக்கூடியவர்கள் தொழிலாளியாகத் தான் இருக்கிறார்கள்! கடலில் மூழ்கி முத்து எடுப்பவனும் தொழிலாளியாகத் தான் இருக்கிறான். உழுது நன்செய் பயிரிடுபவனும் தொழிலாளிதான். அந்தத் தொழிலாளியின் இனம் மகிழ்ந்து கொண்டாடும் திருநாள்தான் மே தினம்” என்று நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்!

அத்தகைய சிறப்புமிக்க, தொழிலாளத் தோழர்கள் தங்கள் உரிமையை வென்றெடுத்த மே நாளில் உலகத் தொழிலாளர்கள் அனைவருக்கும் நான் இந்த நேரத்தில் என்னுடைய நல் வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்!

“திராவிடர்கள் என்றாலே தொழிலாளர்கள்தான்” என்று தந்தை பெரியார் அவர்கள் பெருமையோடு குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். 1932-ஆம் ஆண்டு கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையை தமிழில் மொழிபெயர்த்துத் தந்தவர்தான் தந்தை பெரியார் அவர்கள்.

### முதன்முதலில் மே தினம் கொண்டாடப்பட்டது சென்னையில்தான்!

ரஷ்யா போன்ற பல்வேறு நாடுகளுக்குச் சென்றுவிட்டு தாயகமாம் தமிழகத்திற்குத் திரும்பிய தந்தை பெரியார் அவர்கள், “இனி அனைவரையும் ‘தோழர்கள்’ என்று அழைக்க வேண்டும்” என்று எடுத்துச் சொன்னார்கள்.

> **“உழைப்புக்கு மதிப்பளிப்பது உண்மையாக இருக்க வேண்டும் என்று சொன்னால், உழைப்பவனுக்கு முதலில் மதிப்பளிக்க வேண்டும்” என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அதன்படியே, 1967-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று அண்ணா தலைமையில் ஆட்சி அமைந்தவுடன் மே-1 அன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறையை அண்ணா அவர்கள் கொண்டு வந்தார்கள்.**

மே நாளைத் தமிழ்நாட்டின் அனைத்து நகரங்களிலும் கிராமங்களிலும் இசை நிகழ்ச்சிகளோடு கொண்டாட வேண்டும் என்று நம்முடைய சென்னை நகரம் 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தொழிற்சங்கச் செயல்பாடுகளின் முக்கிய மையமாக இருந்தது. “எட்டு மணி நேரம் வேலை” எனும் உரிமைப்போரில் வென்றதற்கு இந்தியாவிலேயே முதன்முதலில், சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் அவர்களின் தலைமையில் மே தினம் கொண்டாடப்பட்டது இந்தச் சென்னை மாநகரத்தில் தான் என்பதை நான் பெருமை யோடு குறிப்பிட விரும்புகிறேன்.

அதற்கும் முன்பே, இந்தியத் தொழிலாளர்களின் வேலை நேரத்தை 12 மணி நேரமாகக் குறைக்க பெரும் முயற்சிகளை நீதிக் கட்சித் தலைவரான டி.எம். நாயர் அவர்கள் எடுத்திருக்கிறார்.

“உழைப்புக்கு மதிப்பளிப்பது உண்மையாக இருக்க வேண்டும் என்று சொன்னால், உழைப்பவனுக்கு முதலில் மதிப்பளிக்க வேண்டும்” என்றார் பேரறிஞர் அண்ணா அவர்கள். அதன்படியே, 1967-ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் வெற்றி பெற்று அண்ணா தலைமையில் ஆட்சி அமைந்தவுடன் மே-1 அன்று ஊதியத்துடன் கூடிய விடுமுறையை அண்ணா அவர்கள் கொண்டு வந்தார்கள்.

அதற்குப் பிறகு பொறுப்பேற்ற தலைவர் கலைஞர் அவர்கள், அந்த மே 1 விடுமுறை நாளை சட்டமாக்கித் தந்தார். அதற்குப் பிறகு சமூகநீதிக் காவலர் வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்த போது, மே 1 நம்முடைய மாநிலங்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கும் அனைத்து மாநிலங்களுக்கும் தொழிலாளர் தினத்தை ஊதியத்தோடு கூடிய விடுமுறையை அறிவிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து, தலைவர் கலைஞர் அவர்கள் அதையும் நிறைவேற்றித் தரப் பாடுபட்டார் என்பதும் உங்களுக்கெல்லாம் நன்றாகத் தெரியும்.

அவ்வளவு ஏன்?

- **இந்தப் பகுதியில் இங்கே நின்று கொண்டிருக்கிறோமே; இந்த மே தினப் பூங்கா, இதையும் உருவாக்கித் தந்தவர் தான் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.**
- **பூங்காவை மட்டும் அல்ல,**

தொடர்ச்சி 3ஆம் பக்கம்

### சாதிவாரிக் கணக்கெடுப்பை - ஒன்றிய அரசு

## நேர்மையுடனும் வெளிப்படையாகவும் நடத்த வேண்டும்!

### மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி வலியுறுத்தல்!

**புதுடெல்லி, மே 4 -**

**சாதிவாரி கணக்கெடுப்பை - ஒன்றிய அரசு நேர்மையுடனும், வெளிப்படையாகவும் நடத்த வேண்டும் என்று மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல்காந்தி அவர்கள் வலியுறுத்தியுள்ளார்.**



இந்திய மக்கள் அனைவருக்கும் கல்வி, பொருளாதாரம், வேலை வாய்ப்பு உள்ளிட்டவற்றில் சம உரிமை, பாதுகாப்பு கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் திட்டங்களைக் கொண்டு வந்து, சட்டங்கள் இயற்ற சாதிவாரி மக்கள் தொகை கணக்கெடுப்பு அவசியமாகும். இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பை மத்திய அரசு நடத்த வேண்டும் என்று தி.மு.க. உள்ளிட்ட எதிர்க்கட்சியினர் பலரும் குரல் கொடுத்து வந்தனர். மக்கள் தொகை கணக்கெடுப்பு ஒன்றிய அரசின் பட்டியலில் உள்ளது.

நாட்டில் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படுவது வழக்கம். கடந்த 2010-2011 ஆம் ஆண்டில் இறுதியாக இந்த கணக்கெடுப்பு நடைபெற்றது. அதைத்தொடர்ந்து, அடுத்த கணக்கெடுப்பு 2020 - 2021 இல் நடத்தப்பட்டிருக்க வேண்டும். ஆனால், கொரோனா தொற்று காரணமாக அந்த சமயத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தப்படவில்லை.

இந்நிலையில், மக்கள் தொகை கணக்கெடுப்பை சாதிவாரி கணக்கெடுப்பாக ஒன்றிய அரசு நடத்த வேண்டும் என்று தி.மு.க., காங்கிரஸ், இந்தியா கூட்டணி கட்சிகள் உள்ளிட்டவை தொடர்ந்து குரல் கொடுத்து வந்தன. இந்நிலையில், நாடு முழுவதும் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று ஒன்றிய அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லியில் கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு பிரதமர் மோடி தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், சாதிவாரி கணக்கெடுப்புக்கான ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஒன்றிய அரசின் இந்த முடிவுக்கு காங்கிரஸ் உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சியினர் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.

### ராகுல்காந்தி எம்.பி. வரவேற்பு!

இந்நிலையில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, சாதி வாரி கணக்கெடுப்பு குறித்து கூறியதாவது:-

“சாதிவாரி கணக்கெடுப்பை நடத்த வேண்டும் என்ற அறிவிப்பை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், இதனை நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் ஒன்றிய அரசு நடத்த வேண்டும். இதற்கு கால நிர்ணயம் செய்யவேண்டியது அவசியம். அதாவது, எப்போது சாதிக் கணக்கெடுப்பு தொடங்கி முடிக்கப்படும் என்பதை அறிவிக்க வேண்டும். இந்தக் கணக்கெடுப்பின் மூலம் நாட்டிலுள்ள 90 சதவீதம் மக்கள் அதிகார பலத்தை பெறுவார்கள். சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்தும்படி பல முறை பா.ஜ.க. அரசிடம் நாங்கள் கேட்டுள்ளோம். காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் அழுத்தத்திற்கு மத்திய அரசு தற்போது பணிந்துள்ளது.

சாதிவாரி கணக்கெடுப்பை நாங்கள் நடத்திக் காட்டுவோம் என நாடாளுமன்றத்தில் கூறியிருந்தோம். 11 ஆண்டுகளுக்குப் பின் சாதிவாரி கணக்கெடுப்புக்கு ஒன்றிய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. 4 சாதிகளே இருப்பதாக கூறி வந்த மோடியின் அறிவிப்பிற்குப் பின்னால் என்ன உள்ளது என தெரியவில்லை. பல முக்கிய கேள்விகளுக்கு விடையில்லை. சாதிவாரி கணக்கெடுப்புக்கு ஒன்றிய அரசு கால வரம்பு நிர்ணயம் செய்ய வேண்டும். 50 சதவிகித உச்சவரம்பை நீக்க வேண்டும்.”

இவ்வாறு ராகுல்காந்தி எம்.பி. தெரிவித்துள்ளார்.

### 2 பல்கலைக் கழகங்களுக்கு

## துணை வேந்தர்களைத் தேர்வு செய்ய குழு!

### தமிழ்நாடு அரசு அமைத்தது!

**சென்னை, மே 4 -**

**தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு அம்பேத்கர் சட்ட பல்கலைக்கழகங்களுக்கான துணை வேந்தர்களைத் தேர்வு செய்யும் குழுவை நியமித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.**

தமிழ்நாடு அரசு, அரசிதழில் வெளியிடப்பட்டுள்ள செய்தியில்,

தமிழ்நாடு அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்திற்கு துணை வேந்தரை தேர்ந்தெடுக்க, தேடுதல் குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தக்குழுவில், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி அருணா ஜெகதீசன், முன்னாள் துணைவேந்தர்கள் சச்சிதானந்தம், விஜயகுமார் ஆகியோர் இடம்பெற்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இதேபோல், தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள மற்றொரு செய்தியில், தஞ்சாவூரில் உள்ள தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தரை நியமனம் செய்ய ஐவர் கொண்ட தேர்வுக்குழு அமைக்கப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது. இக்குழுவில், சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி கே.பி.கே. வாசுகி, முன்னாள் முதன்மைச் செயலாளர் கே.தீனபந்து, ஓய்வு பெற்ற பேராசிரியர் முனைவர் மு.செல்வம், பெரியார் பல்கலைக் கழக முன்னாள் துணை வேந்தர் முனைவர் மு.தங்கராசு, காந்தி கிராம கிராமியப் பல்கலைக்கழக பேராசிரியர் முனைவர் ச.இராசேந்திரன் ஆகியோர் இடம்பெற்றுள்ளதாக கூறப்பட்டுள்ளது.